புதுச்சேரி அரசு
(சுருக்கம்)

இசநி & வக்ஃபு துறை - புதுச்சேரி மாநிலம், உழவர்கரை நகராட்சி, கதிர்காமம், அருள்மிகு கதிர்வேல்சாமி தேவஸ்தானம் - அறங்காவலர் வாரியம் அமைத்தல் - ஆணை - பிறப்பிக்கப்படுகிறது.

---

இந்து சமய நிலையங்கள் மற்றும் வக்ஃபு துறை

அரசு ஆணை ப.வ.எண்.119/இசநி/கோ.3/2020, புதுச்சேரி, நாள் 23 NOV 2020

பார்வை: 1) அரசு ஆணை ப.வ.எண்.40/இசநி/கோ.3/2015, நாள் 07.10.2015.
2) இந்து சமய நிறுவனங்கள் ஆணையர் அலுவலக கோப்பு எண்.4122/இசநி/கோ.3/2020, நாள் 6.11.2020

---

ஆணை:

புதுச்சேரி மாநிலம், உழவர்கரை நகராட்சி, கதிர்காமம், அருள்மிகு கதிர்வேல்சாமி தேவஸ்தானம், பார்வை (1)-ல் குறிப்பிட்டுள்ள அரசு ஆணை மூலம் ஓர் அறங்காவலர் வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வறங்காவலர் வாரியத்தின் பதவிக்காலம் முடிவடைந்து விட்டது.

2. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட திருக்கோயிலை நிர்வகிப்பதற்கு ஒரு அறங்காவலர் வாரியம் அமைக்க வேண்டியது இன்றியமையாததாகிறது.

3. எனவே, 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிலையங்கள் சட்டம் 4 (1)-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, மேற்கூறிய தேவஸ்தானத்திற்கு பின்வரும் ஐந்து நபர்களைக்கொண்ட ஓர் அறங்காவலர் வாரியத்தை அரசு உடனடியாக அமைக்கிறது:-

திருவாளர்கள்:

| | |
|---|---|
| 1) V. அருள்பெருஞ்ஜோதி, த/பெ விநாயகம்,<br>நெ.46, மாரியம்மன் கோயில் வீதி,<br>கதிர்காமம், புதுச்சேரி | .. தலைவர் |
| 2) P. நிர்மலா, க/பெ பூபதி,<br>எண்.20, மாரியம்மன் கோயில் வீதி,<br>கதிர்காமம், புதுச்சேரி. | .. துணைத் தலைவர் |
| 3) V. பழனி, த/பெ வைத்தியநாதன்,<br>எண்.40, நேரு வீதி,<br>கதிர்காமம், புதுச்சேரி | ...செயலாளர் |
| 4) V. சந்திரசேகரன், த/பெ வெங்கடாச்சலம்,<br>நெ.22, காந்தி வீதி,<br>கதிர்காமம், புதுச்சேரி | ..பொருளாளர் |
| 5) S. முருகையன், த/பெ சந்தானம்,<br>எண்.07, தெற்கு அணைக்கரை வீதி,<br>சொக்கநாதன்பேட்டை, புதுச்சேரி | ..உறுப்பினர் |

4. புதிய அறங்காவலர் வாரியத்தினர் உடனடியாக திருக்கோயிலின் பொறுப்புக்களை அதன் அசையும், அசையாச் சொத்துக்கள் இதர ஆவணங்களுடன் ஏற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5. 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்குட்பட்டு அறங்காவலர் வாரியத்தினர் திருக்கோயிலை நிர்வகிக்கக் கடமைப்பட்டவர்களாவர். மேலும் கடைபிடிக்கவேண்டிய சில முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- கோயிலுக்கு சொந்தமான காலி மனைகள், கோயிலை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் கோயில் குளங்களை தூர்வாருதல்/ சுத்தம் செய்தல் இவைகளை உள்ளடக்கிய ஒரு ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.
- நன்கொடையாளர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை நிறைவேற்ற முழுமுச்சுடன் ஈடுபடுதல் வேண்டும்.
- ஒவ்வொரு வருடத்திற்குமான உத்தேச வரவு செலவு கணக்குகள் மார்ச் மாத காலத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

- கோயில் வரவு செலவு கணக்குகளை முறையாக பராமரித்தல் மற்றும் அக்கணக்கினை ஆண்டுக்கு ஒரு முறை கணக்கு மற்றும் கருவூலத்துறை மூலம் தணிக்கை செய்தலை உறுதி செய்ய வேண்டும்.
- அறங்காவலர் வாரியத்தின் கடமைகளையும் பொறுப்புகளையும் இந்து சமய ஆலய விதிகள் 1975-ன் பிரவு 5-ன் படி செவ்வனே நிறைவேற்றுதல் வேண்டும்.

6. அறங்காவலர் வாரியத்தின் பதவிக்காலம் இவ்வரசாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். இதற்கிடையில் அரசு அவர்களை நீக்கினால் தவிர அல்லது தகுதி இழக்கச் செய்தால் தவிர அல்லது வாரிய உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்யுங்கால் அவர்களின் இராஜினாமாவை அரசு ஏற்றுக்கொண்டால் தவிர வாரிய உறுப்பினர்கள் பதவியில் இருப்பதாகக் கருதப்படுவர்.

/துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி/

23/11/2020

(அ. சிவசங்கரன்)
அரசு சார்புச் செயலர் (கோயில்கள்)

பெறுநர்:
திருவாளர்கள்:

1. அருள்பெருஞ்ஜோதி, தலைவர் த/பெ விநாயகம்,
2. நிர்மலா, துணை தலைவர் க/பெ பூபதி,
3. பழனி, செயலாளர் த/பெ வைத்தியநாதன்,
4. சந்திரசேகரன், பொருளாளர் த/பெ வெங்கடாச்சலம்
5. முருகையன், உறுப்பினர் த/பெ சந்தானம்

இவ்வரசாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஆலயத்தின் பொறுப்புகளை அதன் அசையும், அசையா சொத்துக்கள் இதர ஆவணங்களுடன் பதவி விலகும் அறங்காவலர் வாரியத்திடமிருந்து முழுமையாக பெற்றுக்கொண்டு அது குறித்து ஓர் அறிக்கையை பட்டியல் நகலொன்றுடன் ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுவை அவர்களுக்கு நேரில் சமர்ப்பிக்குமாறும், அவ்வறிக்கையின் நகலொன்றினை துணை இயக்குநர், கணக்கு மற்றும் ஆய்வுப் பிரிவு), . . . அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறும் கோரப்படுகிறது.

நகல் பெறுநர்:
திருவாளர்கள்:

1) முத்தையன், த/பெ. சுப்ரமணியன் (தலைவர்), எண்39, மாரியம்மன் கோயில் சாலை, கதிர்காமம், புதுச்சேரி.
2) அருள்பெருஞ்ஜோதி, த/பெ. விநாயகம் (துணைத்தலைவர்), எண்.46, மாரியம்மன் கோயில் வீதி, கதிர்காமம், புதுச்சேரி.
3) பழனி, த/பெ. வைத்தியநாதன் (செயலாளர்), எண்.40, நேரு வீதி, கதிர்காமம், புதுச்சேரி.
4) பாலமோகன், த/பெ. சொக்கலிங்கம் (பொருளாளர்), எண்.4, கெங்கையம்மன் கோயில் வீதி, கதிர்காமம், புதுச்சேரி.
5) முருகையன், த/பெ. சந்தானம் (உறுப்பினர்), எண்.07, அணைக்கரை வீதி, சொக்கநாதன்பேட்டை, புதுச்சேரி.

திருக்கோயிலின் பொறுப்புக்களை அதன் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள்இதர ஆவணங்களுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அறங்காவலர்வாரியத்திடம் ஒருவார காலத்திற்குள் முழுமையாக ஒப்படைக்குமாறு கோரப்படுகிறது.

6. இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, புதுச்சேரி - மேற்காண் அரசு ஆணையை அரசிதழில் வெளியிட்டு அதன் பத்து நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கோரப்படுகிறது.
7. ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுச்சேரி.
8. துணை இயக்குநர், கணக்கு மற்றும் கருவூல இயக்ககம் (ஆலய தணிக்கை மற்றும் ஆய்வுப்பிரிவு), புதுச்சேரி.
9. காவல்துறை கண்காணிப்பாளர் (தெற்கு), புதுச்சேரி.
10. துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) வடக்கு, புதுச்சேரி.
11. அரசு ஆணை கோப்பு/மேலாளர்/நிர்வாக அதிகாரி/கோ.1/கோ.5/ கோ.6/ கோ.7/ ஆதஉ/உதிரிகள்.